**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை**

**முன்னிலை:– திரு. பா. திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஊத்தங்கரை.**

**2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10–ம் நாள் புதன்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆவணி 25–ம் நாள்**

**இடை நிலை மனு எண்.06/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.183/2020**

அண்ணாமலை .... மனுதாரர் / வாதி

**//எதிர்//**

1. மாணிக்கம் (இறப்பு)
2. லட்சுமணன் (எ) அப்புனு
3. பானு (எ) பானுமதி
4. தங்கராஜி
5. விஜயா
6. பாண்டுரங்கன்
7. தேவகி
8. ரத்தினவேல்
9. ஜெயக்கொடி
10. சார்பதிவாளர், ஊத்தங்கரை

....எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 25.08.2025 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. சக்திவேல், அவர்கள் ஆஜராகியும், 4–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. முருகன், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாத உரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலணையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மேற்படி வழக்கில் தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு, மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுமென்று உரிமையியல் நடைமுறைச் சட்டம், கட்டளை 7 விதி 14(A) பிரிவு 151 –ன் படி இம்மனு தாக்கல்.

**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–**

மனுதாரர் மேற்படி வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம் கோரியும் மற்றும் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு கட்டாய விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு தேவைப்படும் மிக முக்கியமான ஆவணங்களான பிரதிவாதிகள் தாவா சொத்தில் வீடு கட்டி வருவதற்கு வாதி பிரதிவாதிகள் மத்தூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு, மேற்படி புகாரினை பெற்றுக்கொண்டு மத்தூர் காவல் துறையினர் கொடுத்த CSR ரசீது, புகைப்படம் மற்றும் CD ஆகிய ஆவணங்களை இன்று மனுதாரர் தரப்பு ஆவணங்களாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தேவைப்படும் மிக முக்கியமான ஆவணங்களாகும். மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்தால்தான் மனுதாரர் தரப்பினை நிரூபிக்க இயலும். மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இம்மனு தாக்கல்.

**3. எதிர்மனுதாரர்களின் எதிர் உரையின் சுருக்கம்.**

எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல, இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மேற்படி வழக்கில் மனுதாரர்கள் மனுவுடன் ஒப்படைத்துள்ள ஆவணங்கள் எந்தவித அடிப்படை ஆதாரமுமின்றி மனுதாரர்களால் வழக்கு

சொத்து குறித்து வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணம் ஆகும். மேற்படி ஆவணம் இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணமாகும். மனுதாரர் மனுவில் எவ்வித உண்மையும் இல்லை. வாதி வழக்கினை காலம் கடத்த வேண்டும் என்பதற்காக இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர் / வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4. இம்மனுவின் தீர்மானிக்க கூடிய பிரச்சனை யாதெனில் – மேற்படி மனு அனுமதிக்க கூடியதாஎன்பதே ஆகும் ?

<u>5.தீர்வு:–</u>

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் மனுதாரர் மேற்படி வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம் கோரியும் மற்றும் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கு கட்டாய விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கிற்கு தேவைப்படும் மிக முக்கியமான ஆவணங்களான பிரதிவாதிகள் தாவா சொத்தில் வீடு கட்டி வருவதற்கு வாதி பிரதிவாதிகள் மத்தூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு, மேற்படி புகாரினை பெற்றுக்கொண்டு மத்தூர் காவல் துறையினர் கொடுத்த CSR ரசீது, புகைப்படம் மற்றும் CD ஆகிய ஆவணங்களை இன்று மனுதாரர் தரப்பு ஆவணங்களாக ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தேவைப்படும் மிக முக்கியமான ஆவணங்களாகும் என்றும், மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்தால்தான் மனுதாரர் தரப்பினை நிரூபிக்க இயலும் என்றும், மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என்றும் எடுத்துரைத்தார். ஆனால் கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி வழக்கில் மனுதாரர்கள் மனுவுடன் ஒப்படைத்துள்ள ஆவணங்கள்

எந்தவித அடிப்படை ஆதாரமுமின்றி மனுதாரர்களால் வழக்கு சொத்து குறித்து வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றும், மேற்படி ஆவணம் இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணமாகும் என்றும், மனுதாரர் மனுவில் எவ்வித உண்மையும் இல்லை என்றும், வாதி வழக்கினை காலம் கடத்த வேண்டும் என்பதற்காக இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர் / வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் எடுத்துரைத்தார். இருதரப்பு வாதுரை மற்றும் சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலிக்கையில் மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தேவைப்படும் மிக முக்கியமாண ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்தால் தான் மனுதாரர் தரப்பினை நிரூபிக்க இயலும் என எடுத்துரைத்திருப்பதை கருத்தில் கொண்டும், மேற்படி வழக்கு ஆவணங்களை பொறுத்து குறுக்கு விசாரணையில் கேள்வி கேட்க எதிர்மனுதாரருக்கு வழிவகைகள் உள்ளதாலும், அதேபோல் மேற்படி ஆவணங்களின் மீதான ஆட்சேபனைகள் குறியீடு செய்யும் போது தெரிவிக்கும் பட்சத்தில் அது பரிசீலிக்கப்படும் என்பதாலும், மனுதாரருக்கு அவரது தரப்பு எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு வழங்கலாம் இந்நீதிமன்றம் கருதுவதாலும், மேலும் பல வழக்குகள் உருவாவதை தடுப்பதற்காகவும் இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (10.09.2025) இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge,
Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

**1. மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** **இல்லை .**

**2. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** **இல்லை.**

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge,
Uthangarai.

Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.